# உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்

## International Association of Tamil Research (IATR)

**உலகத் தமிழ் மொழி நாள் மற்றும் தமிழ் வார விழா**

**ஏப்ரல் 29, 2025**

தமிழ் இணையக் கல்விக்கழகம் கலையரங்கம்

காந்தி மண்டபம் சாலை , கோட்டூர் , சென்னை – 600025.

## உலகத் தமிழ் மொழி நாள் மற்றும் தமிழ் வார விழா

**ஏப்ரல் 29, 2025**

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம், ஏப்ரல் 29, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாளன்று, அனைத்திந்தியத் தமிழ்ச் சங்கப் பேரவை, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் தமிழ் மன்றம், அமெரிக்கா, இலெமுரியா அறக்கட்டளை, மும்பை, கருநாடக மாநில தமிழ் பத்திரிகையாளர் சங்கம், பெங்களூரு, உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகம், கவிஞர் புதுவைச் சிவம் இலக்கியப் பேரவை, புதுச்சேரி, வலைத்தமிழ், அமெரிக்கா, கவிஞர் கோ மோகனரங்கன் தமிழியல் ஆய்வு மையம் ஆகிய தமிழ் அமைப்புகளுடன் கரம்கோர்த்து **"உலகத் தமிழ் மொழி நாள் மற்றும் தமிழ் வார விழா**" கொண்டாடுகிறது.

மாபெரும் தலைவர்கள், கவிஞர்கள், அறிஞர்கள், தமிழ் உணர்வாளர்கள் பங்கேற்கும் இந்த விழாவிற்கு உங்களை அழைப்பதில் மகிழ்கிறோம்.

நாள்: 29-04-2025 நேரம்: மாலை 5.00 மணி

நிகழ்விடம்
தமிழ் இணையக் கல்விக்கழகம் கலையரங்கம்
காந்தி மண்டபம் சாலை , கோட்டூர் , சென்னை – 600025.
(அண்ணா நூலகம் அருகில்)



அன்புடையீர் வணக்கம்,

உலகெங்கும் வாழும் பல்வேறு மொழி மக்கள் தமக்கென்று ஒரு மொழி நாளை அறிவித்து கொண்டாடிவருகிறார்கள். அதுபோல் உலகத்தின் மூத்த நம் அன்னைத்தமிழுக்கும் "**உலகத் தமிழ் மொழி நாள்**" மற்றும் "**தமிழ் வார விழாவினை**" என்று அறிவிக்க வேண்டும் என்று உலகெங்கும் வாழும் தமிழர்கள் வேண்டுகோள் விடுத்து வருகிறார்கள்.

அதையொட்டி, நமது நாட்டின் விடுதலைக்கும் , தமிழ் மொழிக்காகவும் , தமிழ் இனத்திற்காகவும், இனத்தில் சமத்துவத்திற்காகவும் பாடி எழுச்சியை உருவாக்கி, தமக்கென ஒரு கவிதை பரம்பரையை உருவாக்கியவர் நமது புரட்சிக்கவிஞர், பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள். எனவே, அவரது பிறந்தநாளாம் ஏப்.29-ஆம் நாளை "**உலகத் தமிழ் மொழி நாள்**" (World Tamil Language Day) எனவும், அந்நாளை உள்ளடக்கிய வாரத்தை **உலகத் தமிழ் மொழி வாரம்** எனவும் அறிவிப்பது பொருத்தமாக அமையும் எனும் உயர்ந்த நோக்கத்தில் உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம் நமது மாண்புமிகு தமிழ் நாடு முதல்வர் அவர்களிடமும், அமைச்சர் பெருமக்களிடமும் கோரிக்கை வைத்தது. நமது மக்கள் நலம் காக்கும் அரசு இதனை அன்புடன் ஏற்று ஏப்ரல் -29லிருந்து மே- 5வரை **தமிழ் வார விழா** என அறிவித்து தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் புரட்சிக் கவிஞருக்கும் பெருமை சேர்த்திருக்கிறது. நமது மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிதனை உரித்தாக்குகிறோம்.

.

இந்நிலையில், இந்த ஆண்டு, புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாளான, ஏப்ரல் 29, செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு, உலகில் பல்வேறு பகுதிகளில் சிறப்பாக செயல்பட்டுவரும் தமிழ் அமைப்புகளோடு இணைந்து உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் "**உலகத் தமிழ் மொழி நாள்**" மற்றும் **தமிழ் வார விழா** தொடக்க நாளாகக் கொண்டாடுகிறது.

தமிழர் தலைவர் ***ஆசிரியர்* கி. வீரமணி** அவர்கள் தலைமையேற்று நிறைவுரை ஆற்றவிருக்கும் விழாவில் பேராசிரியர் .கவிஞர் .**ஈரோடு .தமிழன்பன்**, *கலைமாமணி* எழுச்சிக்கவிஞர் .**பொன்னடியார்** , பேராசிரியர் **மறைமலை இலக்குவனார்** ஆகியோர் சிறப்புரையாற்ற இருக்கிறார்கள்.

பல தமிழ் உணர்வாளர்களும், சான்றோர்களும் கலந்து கொள்ளும் இந்த வரலாற்றுச் சிறப்பு விழாவில் தாங்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க அன்புடன் அழைக்கிறோம் .

| | | |
|---|---|---|
| அரசர் அருளாளர் | பேரா.முனைவர் ப மருதநாயகம் | த. ஞானசேகரன் |
| தலைவர் | துணைத் தலைவர் | பொதுச் செயலாளர் |

# உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்
## International Association of Tamil Research (IATR)
# உலகத் தமிழ் மொழி நாள் மற்றும் தமிழ் வார விழா

## நிகழ்ச்சி நிரல்

29-04-2025, செவ்வாய்க்கிழமை, மாலை

| நேரம் | | |
|---|---|---|
| 5:00 | | வருகைப் பதிவும், சந்திப்பும், சிற்றுண்டியும் |
| 5:30 | தமிழ்த்தாய் வாழ்த்து<br>புரட்சிக்கவிஞர் பாடல்கள் | ***கலைமாமணி*.முனைவர்.டி.கே.எஸ்.கலைவாணன்**<br>நிர்வாக இயக்குனர், உலகத்தமிழ் இசைக்கழகம் |
| 5:40 | வரவேற்புரை | **பொறியாளர். த.ஞானசேகரன்**<br>பொதுச்செயலாளர், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் |
| 5:50 | நோக்கவுரை | **திரு. சு. குமணராசன்**<br>நிறுவுனர், லெமுரியா அறக்கட்டளை, மும்பாய் |
| 6:00 | காணொளி உரை | **பொறியாளர். அரசர் அருளாளர்** (சிக்காகோவிலிருந்து)<br>தலைவர், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் |
| 6:05 | காணொளி உரை | **பேரா. முனைவர் மருதநாயகம்** (லண்டனிலிருந்து)<br>துணைத்தலைவர், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் |
| 6:10 | கருத்துரை | **திரு. துரைக்கண்ணன்**<br>தலைவர், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் தமிழ்மன்றம், அமெரிக்கா |
| 6:15 | உலகத் தமிழரின்<br>உலகத் தமிழ் மொழி நாள் | **பேராசிரியர். கவிஞர் ஈரோடு தமிழன்பன்** |
| 6:30 | உலகத் தமிழ் மொழி நாள் –<br>செயல் திட்ட முன்மொழிவு | **பேராசிரியர் மறைமலை இலக்குவனார்**<br>தலைவர், உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகம் |
| 6:45 | உலகத் தமிழ் மொழி நாளும்<br>பாவேந்தரும் | ***கலைமாமணி* எழுச்சிக்கவிஞர் பொன்னடியார்**<br>தலைவர், தமிழ்க் கவிஞர் மாமன்றம், ஆசிரியர் '*முல்லைச்சரம்*' |
| 7.00 | தலைமை மற்றும் நிறைவுரை | **தமிழர் தலைவர் *ஆசிரியர்* கி. வீரமணி**<br>தலைவர், திராவிடர்க் கழகம் |
| 7:30 | தீர்மான உரை | **திரு. முத்துமணி நன்னன்**<br>தலைவர் ,கருநாடக மாநில தமிழ்ப் பத்திரிகையாளர் சங்கம், பெங்களூரு |
| 7:35 | நன்றியுரை | **திரு. மு.முத்துராமன்**<br>பொதுச்செயலாளர். அனைத்திந்திய தமிழ்ச்சங்கப்பேரவை |
| 7:45 | நாட்டுப்பண் | |
| | நிகழ்ச்சி இணைப்புரையாளர் | **பேராசிரியர் முனைவர் மைக்கேல் பாரடே**<br>ஒருங்கிணைப்பாளர் - பேராசிரியர்கள் குழு, உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் |

# உலகத் தமிழ் மொழி நாள் மற்றும் தமிழ் வார விழா

ஏப்ரல் 29, 2025

## விழாக்குழுவினர்

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்

அனைத்திந்தியத் தமிழ்ச் சங்கப் பேரவை

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் தமிழ் மன்றம், அமெரிக்கா

லெமுரியா அறக்கட்டளை, மும்பாய்

கருநாடக மாநில தமிழ்ப்பத்திரிகையாளர் சங்கம், பெங்களூரு

உலகத்திருக்குறள் இணையக் கல்விக்கழகம்

கவிஞர் புதுவைச் சிவம் இலக்கியப் பேரவை, புதுச்சேரி

கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ மோகனரங்கன் தமிழியல் ஆய்வு மையம், சென்னை

வலைத்தமிழ், அமெரிக்கா